**<u>இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்</u>**

**<u>O.S. 133/2019</u>**

**பிவாசாஆ.1 ஆத்தியப்பன்**

**Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of the day of 17.11.2025.**

**<u>குறுக்கு விசாரணை</u>**

வழக்கில் மொத்தம் எத்தனை பிரதிவாதிகள் என்றால் 7 பேர் அதில் 2 பேர் காலம் சென்றுவிட்டார்கள். இவ்வழக்கில் 8 வது பிரதிவாதி நான் என்றால் சரிதான். வாதி இவ்வழக்கை எதற்காக தாக்கல் செய்துள்ளார் என்ற விபரம் தெரியும். எங்கள் முன்னோர்கள் நடத்திய கோவிலை வாதிகளின் கோவில் என்று கோரி பிரச்சனை செய்ததால். இவ்வழக்கை மற்ற பிரதிவாதிகளுக்கு அல்லாமல் எனக்கு மட்டும் தான் நடத்துகிறேன் என்றால் சரிதான். எங்கள் ஊரில் எத்தனை குடும்பதாரர்கள் இருக்கிறோம் என்றால் 5. மேற்படி குடும்பத்தார்களில் எத்தனை வரிகாரர்கள் என்றால் வரிகாரர்கள் இல்லை. வரியும் இல்லை. பொதுவாக கோவில் பொறுப்பில் இருந்தால் அதனை நிர்வகிப்பதற்கு நிர்வாகிகள் பொறுப்பாளர்கள் நிர்ணயிக்கப்படுவார்கள் என்றால் சரிதான். கோவிலுக்கு கமிட்டி உண்டு என்றால் சரிான். நான் 2010 லிருந்து மேற்படி கோவிலை நடத்துவதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். அதற்கு முன்பாக மேற்படி கோவிலை யார் நடத்தினார்கள், யார் தலைமையில் நடத்தப்பட்டது என்ற விபரம் வழக்கில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். நாங்கள் நடத்தியதாக குறிப்பிட்டுள்ளாம். கோவிலில் என்னென்ன பூஜைகள் நடத்துவோம் என்றால் வாரத்தில் இரண்டு நாள் செவ்வாய் மற்றும் வெள்ளிக்கிழமை பூஜை நடைபெறும். மேற்படி விபரங்கள் அனைத்தும் கோவிலின் மினிட் புக்கில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி பூஜைகள் நடத்துவது குறித்து என்னென்ன ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளோம் என்றால் கோவில் நடத்துவதற்குரிய ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளோம். எனது சொந்த ஊர் பொத்தையடி. வழக்கின் மற்ற பிரதிவாதிகளும் அதே ஊரை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். என்னுடைய வீடுகள் இருக்கக்கூடிய இடங்கள் குடும்ப சொத்து அல்ல அரசுக்கு உரிமைப்பட்டது என்றால் சரியல்ல எனது அப்பாவின் சொத்து. அதற்கு பட்டா, கரத்தீர்வை வைத்துள்ளேனா என்றால் வைத்துள்ளேன். எனது வீடு இருக்கும் அருகில் தான் 5 குடும்பத்தார்களும் இருக்கிறார்கள் என்றால் சரிதான். நான் ஒரு ஐயப்ப பக்தர் என்பதால் மலைக்கு மாலை கார்த்திகை 1 இன்று முதல் 48 நாட்கள் மண்டல பூஜை, ஐயப்ப பக்கதர்கள் சேர்ந்து பொத்தையடியில் வீடு

இருக்கும் அருகில் நடத்துகிறார்கள் என்றால் சரிதான். கோவிலின் அருகே. பொத்தையடியில் எனது வீட்டிற்கு மேற்கு பக்கத்தில் மாடசாமி கோவில் ஒன்று உள்ளது என்றால் சரிதான். மேற்படி மாடசாமி கோவிலில் தினமும் விளக்கு ஏற்றுவோமா என்றால் வெள்ளி மற்றும் செவ்வாய் கிழமைகளில் விளக்கு ஏற்றுவார்கள். ஒத்தப்பனை ஸ்ரீ இசக்கியம்மன் கோவில் என்று ஒரு அம்மன் கோவில் உள்ளது என்றால் சரிதான். மேற்படி அம்மன்கோவில் ரோட்டிற்கு வடக்கு பக்கம் உள்ளது என்றால் சரிதான். மேற்படி இசக்கி அம்மன்கோவிலுக்கும் ரோட்டிற்கும் இடையில் உள்ள பகுதி நீர்வளத்துறைக்கு சொந்தமான அரசு நிலம் என்றால் சரிதான். மேற்படி இடத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி அரசு இடத்தின் சர்வே எண்.220 என்றால் 219. மேற்படி பிரதிவாதிகள் சேர்ந்து போடப்பட்டுள்ள பாலத்தின் மேல் சுடலைமாடசாமி கோவிலும், மற்றும் 2 கட்டிடங்களும் உள்ளது என்றால் சரிதான். மேற்படி சுடலை மாடசாமி கோவிலில் நாங்கள் பூஜை நடத்துகிறோமா என்றால் நடத்துகிறோம். மேற்படி கோவில் 2010 க்கு முன்பாக கட்டப்பட்டது என்றால் சரிதான். மேற்படி சுடலைமாடசாமி கோவில் மற்றும் இதர கட்டிடங்கள் அரசுக்கு சொந்தமான இடத்தில் இருப்பதால் அதனை இடித்தார்கள் என்றால் சரிதான். மேற்படி கட்டிடங்களை இடித்ததற்கு புகாரோ வழக்கோ தாக்கல் செய்யவில்லை. கோவிலில் திருவிழா என்றால் நிகழ்ச்சிகள் வகுக்கப்படும் என்றால் சரிதான். எந்தெந்த வருடம் திருவிழா நடத்தியதற்கான அழைப்பிதழ்கள், ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன் என்றால் 2002, 2004, 2014, 2015, 2017, 2018, 2019. சிவபாலன் என்பவர் கோவிலின் உறுப்பினரா என்றால் இல்லை. ராமநாடார் என்பவருக்கும் கோவிலுக்கும் என்ன சம்பந்தம் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எத்தனை நாட்கள் கோவில் திருவிழா நடைபெறும் என்றால் 3 நாட்கள். 3 நாட்கள் திருவிழா நடத்துவதாக பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிட்டுள்ளோம். பிவாசாஆ-19 அழைப்பிதழ்கள் எந்த கோவிலுக்கானது என்றால் பொத்தையடி அருள்மிகு இசக்கியம்மன்கோவில் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. 2004 அழைப்பிதழில் எந்த கோவில் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் பொத்தையடி அருள்மிகு இசக்கியம்மன்கோவில் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதிலும் 3 நாட்கள் திருவிழா நடத்தப்பட்டது என்றால் சரிதான். 2019 திருவிழா அழைப்பிதழில் பொத்தையடி ஒத்தப்பனை இசக்கியம்மன்கோவில் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. நான் பிவாசாஆ.19 ஐ வழக்கிற்காக தயார் செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிர்வழக்குரையிலோ பிரமாண வாக்குமூலத்திலோ கோவிலின் வரவு செலவு மினிட் புக்கில் பதிவு செய்ததாக குறிப்பிட்டுள்ளோமா என்றால் இல்லை ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளோம். நான் தாக்கல் செய்துள்ள பிவாசாஆ.20 ல் மினிட் புக்கில் 2010 ல் இருந்து தாக்கல் செய்ததாக தான் குறிப்பிட்டுள்ளேன். அதன் அசல்

ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை அதன் காரணம் என்ன என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 2010 மினிட் புக் எப்போது வாங்கினேன் எந்த கடையில் வாங்கினேன் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. பிவாசாஆ-19 முதல் பக்கத்தில் இருந்து கடைசி பக்கம் 59 வரை ஒரே நபரால் எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ஒரு மினிட் புக் எழுதும் சமயத்தில் முந்தைய மாதம் மற்றும் வருட கணக்கு எழுதப்படும் அதன்படி பிவாசாஆ.19 ல் எழுதப்பட்டுள்ளதா என்றால் இல்லை. கோவிலுக்கு தலைவர், செயலர், பொருளாளர் உண்டு. பிவாசாஆ.19 ல் தலைவர், செயலர், பொருளாளர் எங்கு குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது. 2010 ம் வருடம் பிவாசாஆ-19 ல் மினிட் புக்கில் நிர்வாகிகள் பெயர் மற்றும் அவர்களது பொறுப்புகள் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. கோவிலின் முத்திரை போடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. பிவாசாஆ.19 ல் 44 ம் பக்கத்தில் 2018 மினிட் புக்கில் என்னை தலைவராக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிவாசாஆ.19 எதிருரை மற்றும் முதல் விசாரணை தாக்கல் செய்த பின்பு தயார் செய்து தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. 9 ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய கோரி IA.12/2025 மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி மனுவில் மட்டும் தான் மினிட் புக் குறித்து குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். வடக்கு தாமரைக்குளம் கோவிலின் சர்வே நம்பர் என்ன என்றால் தெரியாது. கோவிலின் கரத்தீர்வை 2025 வரை நாங்கள் கட்டியுள்ளோம் என்றால் சரிதான். தங்கநாடார் எனது உறவினரா என்றால் இல்லை. பொன்னுசாமி வழக்கின் வாதி என்றால் சரிதான். தங்கநாடார் மகன் பொன்னுசாமி 2023 ல் கோவிலுக்கு கரத்தீர்வை செலுத்தியுள்ளார் என்று என்னிடம் காட்டப்படும் ஆவண்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி கோவிலுக்கு மின்சார இணைப்பு உள்ளது என்றால் சரிதான். மின்சார இணைப்பு யார் பெயரில் உள்ளது என்றால் பொன்னுசாமியின் தாயார் பத்மாவதி பெயரில் உள்ளது.தங்க நாடாருக்கும் எங்கள் குடும்பத்தாருக்கும் எந்த உறவும் கிடையாது என்றால் சரிதான். சொத்தானது தமிழரசி, பொன்னுசாமி, ராஜதுரை, செல்வராஜ் யெரில் உள்ளது என்றால் தெரியாது. எங்கள் சொத்தில் வேறு ஒரு வந்து கோவில் கட்டுவதற்கு அனுமதிப்பீர்களா என்றால் அனுமதிக்கமாட்டோம். நாங்கள் கட்டிய கோவிலில் வேறு யாரேனும் பூஜை செய்ய அனுமதிப்போமா என்றால் அனுமதிக்கமாட்டோம். வழக்கில் 1 ம் பிரதிவாதியின் பெயர் என்ன என்றால் தெரியாது ஆளை பார்த்தால் தெரியும். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் இருப்பது 1 ம் பிரதிவாதி என்றால் சரிதான். **மேற்படி புகைப்படும் வாசாஆ.18 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**